**செய்தி வெளியீடு எண்: 63** **நாள்:27.01.2013**

## செய்தி வெளியீடு

தமிழகத்திலுள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையின மாணவ, மாணவியர் தங்கு தடையின்றி தங்களது கல்வியை தொடர்ந்து பயிலுவதற்காக தமிழகமெங்கும் 1,266 மாணவ, மாணவியர் தங்கும் விடுதிகள் இயங்கி வருகின்றன.

தற்பொழுதுள்ள விடுதிகள் பல வாடகைக் கட்டடங்களில் இயங்குவதால், போதுமான வசதிகள் அங்கு இல்லை. எனவே, மாணவ, மாணவியர் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர். இதனைக் கருத்தில் கொண்டு வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் அனைத்து விடுதிகளுக்கும் படிப்படியாக சொந்தக் கட்டடம் கட்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு முடிவெடுத்ததுள்ளது.

அதன் அடிப்படையில், இந்த ஆண்டு வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் 56 பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையின மாணவ, மாணவியர் தங்கி பயிலும் விடுதிகளுக்கு, 100 மாணவர்கள் தங்கும் விடுதிகள் ஒவ்வொன்றும் 1.24 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், 50 மாணவர்கள் கொண்ட விடுதிகள் ஒவ்வொன்றும் 71.15 லட்சம் மதிப்பீட்டிலும் சொந்தக் கட்டடம் கட்டப்படும். இந்த திட்டத்தினை 50 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்த, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஒப்புதல் அளித்து உத்தரவிட்டுள்ளார்கள்.

இதில் 100 மாணவ, மாணவியர் எண்ணிக்கை கொண்ட 8 விடுதிகள், 50 மாணவ, மாணவியர் எண்ணிக்கை கொண்ட 20 விடுதிகள் என 28 பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள், 100 மாணவர்கள் எண்ணிக்கை கொண்ட 6 விடுதிகள், 50 மாணவ, மாணவியர் எண்ணிக்கை கொண்ட 15 விடுதிகள் என 21 மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள், 100 மாணவ, மாணவியர் எண்ணிக்கை கொண்ட 1 விடுதி, 50 மாணவ, மாணவியர் எண்ணிக்கை கொண்ட 3 விடுதிகள் என 4 சீர்மரபினர் நல விடுதிகள், 50 மாணவ, மாணவியர் எண்ணிக்கை கொண்ட 3 விடுதிகள் என 3 சிறுபான்மையினர் நல விடுதிகள் என வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் 56 நல விடுதிகளுக்கு சொந்தக் கட்டடம் கட்டப்படும்.

மேலும் இந்த விடுதிகளுக்கு சொந்தக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்ட பின்னர், ஒவ்வொரு விடுதியிலும் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை மூலம் சூரிய ஒளி மூலம் தண்ணீரை சூடுபடுத்தும் கருவிகள் மற்றும் 'சூரிய ஒளி போட்டோ வோல்டிக் பவர் பிளாண்ட்' ஆகியவை 3.95 லட்சம் மதிப்பீட்டில் நிறுவுவதற்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

********

வெளியீடு:- இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9
நாள்:- 27.1.2013.